30th March 1966]

(b) whether the Government have received recently any memorandum from the Last Grade Government Servants' Association, Kanyakumari district; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No.

(c) Does not arise.

சரஸ்வதி உயர்த்தொடக்கப்பள்ளி, மதுரை

*543 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் இடிந்து விழுந்த மணிநகரம் சரஸ்வதி பள்ளியை மீண்டும் நடத்தவேண்டும் என்று கோரி அப்பள்ளியின் நிர்வாகியிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவ்ரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Manager and Correspondent of the Sri Saraswathy Higher Elementary School, Maninagaram, Madurai, addressed the Government to restore recognition for the School with effect from the academic year 1964–65. The Government decided not to accede to the request.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த இடிந்து விழுந்த பள்ளிக்கூடக் கட்டடம் அரசாங்க மான்யத்தை வாங்கிக் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் சரியாகக் கட்டப்படவில்லையாதலால், இப்படி மான்யமாக வாங்கிய தொகையைத் திருப்பி வாங்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் மான்யம் எவ்வளவு கொடுத்தது, கொடுத்ததா, எப்படி கட்டப்பட்டது என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இடிந்து விழுந்த இந்த மணிநகரம் பள்ளி, இதே போன்று சென்னையில் வெடி மருந்து சாலை ஆகிய சம்பவங்களில், 60, 70, பேர்கள் மரணம் அடைந்தார்கள். நாம் வழக்குப் போட்டாலும், இவைகளுக்கெல்லாம் நமக்கு நியாயம் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் சர்க்கார் தரப்பு வக்கீலின் வாதத்தன்மை குறைவா அல்லது சட்டத்தில் ஏதாவது தவறு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோர்ட்டில் வழக்குப் போட்டால், அதற்கு மேலே விமர்சனம் செய்வது முறையல்ல.